## தேசிய கைப்பணிகள் மன்றம் - 2014

தேசிய கைப்பணிகள் மன்றத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1982 இன் 35 ஆம் இலக்க தேசிய கைப்பணிகள் மன்ற இணைக்கப்பட்ட அதிகாரச்சட்டத்தின் 84(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் மன்றத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மன்றத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய கைப்பணிகள் மன்றத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் கொள்கை**

சொத்தொன்று பயன்பாட்டிற்கு உகந்த நிலையை அடைந்த சந்தர்ப்பத்திலிருந்து பயன்தரு ஆயட்காலம் முழுவதும் கிரமமானதொரு அடிப்படையில் அந்த சொத்து பெறுமானத்தேய்விடப்பட வேண்டிய போதிலும் ரூபா 718,228 பெறுமதியான நூலக புத்தகங்கள் தொடர்பில் பெறுமானத்தேய்வுக் கொள்கை தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07**

சொத்துக்கள் ஓவ்வொரு மூன்று வருடங்களுக்கு அல்லது ஐந்து வருடங்களுக்கு ஒரு தடவை மீள்மதிப்பீடு செய்யப்பட்டு நியாயப்பெறுமதி காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 கணக்கிட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) அரசாங்கத்தின் மானியத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்த நடைமுறையல்லா சொத்துக்கள் வருடாந்தம் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் உரிய காலக்கழிவினை கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் இறுதியில் அரசின் மானியங்களின் மீதி ரூபா 95,047,571 ஆக இருந்ததுடன், அதனை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற நடைமுறையல்லாச் சொத்துக்களின் தேறிய பெறுமதி ரூபா 61,575,322 ஆக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்குரிய கணக்காய்வுக் கட்டணத்திற்காக நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருக்காததுடன், நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் செலுத்த வேண்டிய நிலுவைக் கணக்காய்வு கட்டணம் ரூபா 1,593,605 ஆகும்.

(இ) நடைமுறை வேலையாக காண்பிக்கப்பட வேண்டிய ரூபா 4,171,985 தொகை காணி மற்றும் கட்டிடங்களின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) உள்ளக நிதி மாற்றல்களின் பதிவுகளை சரியாக கணக்கீடு செய்யாமையால் கைப்பணிகள் நிதியக் கணக்கு ரூபா 1,100,000 இனால் குறைத்தும் செலுத்த வேண்டிய பணம் அந்த தொகையினால் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டில் வரிசை அமைச்சிடமிருந்து கட்டிட நிர்மாணத்திற்காக கிடைக்கப்பெற்ற ரூபா 4,161,485 தொகை மூலதன மானியமாகக் கணக்கு வைப்பதற்குப் பதிலாக ஏனைய வருமானமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

மீளாய்வாண்டின் நிதி நிலைமைக்கூற்றுக்களில் 07 சொத்துக் கணக்குகளுக்குரிய சொத்துப் பதிவேடுகளை பட்டோலைகளுடன் இணக்கம் செய்த போது ரூபா 2,022,607 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றின்மை

ரூபா 404,469 கூட்டுத்தொகையான பொறுப்புக்கள் மற்றும் ரூபா 11,388,580 கூட்டுத்தொகையான மூலப்பொருட்கள் மற்றும் காட்சிக்கூட இருப்புகளுக்கான மீதி உறுதிப்படுத்தல் மற்றும் இருப்பு மெய்மையாய்வுச் சபையின் அறிக்கை என்பன கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணக்கமின்மைகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றிற்கான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| i. நிதிப் பிரமாணம் 371(இ) | மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 1,107,311 கூட்டுத்தொகையான முற்பணங்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் அதில் ரூபா 232,675 தொகை 02 வருடங்களை விட பழைய மீதியையும் உள்ளடக்கியிருந்தது. |
| ii. நிதிப் பிரமாணம் 387 | வங்கி கணக்கொண்றில் வங்கி மேலதிகப்பற்று பெறுதல் தடைசெய்யப்பட்டுள்ள போதிலும், மன்றத்தின் வங்கிக் கணக்கொன்றில் வருடம் முழுவதும் மேலதிகப்பற்று மீதியொன்று நிலவியது. |
| iii. நிதிப் பிரமாணம் 396(ஈ) | மூன்று வங்கிக் கணக்குகளில் வழங்கப்பட்ட என்னும் கொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை கடந்த ரூபா 47,923 கூட்டுத்தொகையான 13 காசோலைகள் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை |
| (இ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | கணனி, கணனி உபபாகம் மற்றும் மென் பொருளுக்காக பதிவேடொன்று பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மன்றத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவுகள் ரூபா 4,035,820 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 30,791,896 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிதி விளைவுகளில் ரூபா 26,756,076 ஆன அதிகரிப்பொன்றினை காணக்கூடியதாக இருந்ததுடன், மன்றத்தின் மொத்த வருமானத்தை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 46 சதவீதத்தினால் உயர்வடைந்தமை இந்த அதிகரிப்பிற்கு பிரதானமான காரணமாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சீகிரிய கைப்பணி கிராமத்தில் வாடகைக்கு வழங்கப்பட்ட கூடாரங்களில் 2014 திசெம்பர் 09 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டிய நிலுவை கட்டணம் ரூபா 143,000 இனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 ஆம் ஆண்டு முதல் வங்கி கணக்கிணக்கக் கூற்றில் காணப்படும் ரூபா 2,627,489 செலவு மீதி மற்றும் ரூபா 152,252 வரவு மீதிகளை இனங்கண்டு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) தேசிய கைப்பணிகள் மன்றத்தினால் ‘‘அபே கம’’ இல் வருடாந்தம் நடாத்தப்படுகின்ற கைப்பணி கண்காட்சி மூலம் வெற்றிபெற்ற விசேட கலை வடிவமைப்பாளர்களுடைய கைப்பணி அருங்காட்சியகமொன்றை ‘‘அபேகம’’ இல் அமைத்திருந்ததுடன் அதன் பராமரிப்பிற்காக மீளாய்வாண்டில் ரூபா 659,072 செலவிடப்பட்டிருந்த போதிலும் அத்தொகையை பாரம்பரியக் கைத்தொழில் சபையிலிருந்து மீளளிப்புச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

நகர அபிவிருத்தி அதிகாரசபையில் 99 வருட குத்தகை அடிப்படையில் கைப்பணிகள் மன்றத்திற்கு கையளிக்கப்பட்ட காணியில் அமைந்திருந்த கட்டிடங்கள் 2013 ஆம் ஆண்டில் இடம்பெற்ற பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின் மாநாட்டிற்கான நிர்மாணக் குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் உடைத்து அகற்றப்பட்டிருந்தது. அதனோடு தேசிய கைப்பணிகள் மன்றத்துடன் இணைந்ததாக நிர்மாணிக்கப்பட்டிருந்த லக்சல அருங்காட்சியகத்தினை உடைத்து அப்புறப்படுத்தி மன்றத்திற்கு சொந்தமான காணியிலும் 60 அடி அளவில் உள்ளடங்கக்கூடியவாறு மீள நிர்மாணிக்கப்பட்டுள்ள ‘‘அபேகம’’ இலங்கை பாரம்பரியக் கைத்தொழில் சபையின் மூலம் நிருவகிக்கப்படுகின்றமையால் இந்தக் காணியின் உரிமை தொடர்பாக சர்ச்சைக்குரிய தன்மையிலான நிலைமை ஏற்பட்டிருந்ததுடன் அதனை தீர்ப்பதற்கு நவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

கிராமிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் ஆரம்பிக்கப்பட்ட 03 ஏக்கர்களையுடைய ‘‘சிகிரிய கைப்பணிக் கிராமம்’’ தற்போது 04 மாடிகளையும் 40 விற்பனைக் கூடாரங்களையும் உள்ளடக்கியிருந்த போதிலும் ஒரு கட்டிடமும் 09 விற்பனைக் கூடாரங்களும் மாத்திரமே பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தன. லக்சல இற்காக வழங்கப்பட்ட கட்டிடம், விரிவுரை மண்டபம், சிற்றுண்டிச்சாலை, மலசலகூடத்தொகுதி என்பன பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டதுடன் பயன்படுத்துவதற்கு நீர் இல்லாமை, சுற்றுலா பிரயாணிகள்

வருகை தராமையால் கைப்பணியாளர்களின் வருமானம் குறைந்தமை கிராமத்தை நடாத்திச் செல்வதிலுள்ள வசதியீனங்களுக்காக முக்கிய தாக்கமளித்திருந்தது.

**4.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

தேசிய கைப்பணிகள் மன்ற காட்சியகத்தை முறைமைப்படுத்துதல் மற்றும் உள்ளக அலங்காரங்களிற்காக 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 1,431,316 தொகை செலவில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடம் மற்றும் கைப்பணிகள் மன்ற வளவில் கைப்பணிக் கிராமத்திற்கு உட்செல்வதற்காக ரூபா 1,152,902 செலவில் நிர்மாணிக்கப்பட்ட மரப்பாலம் என்பவற்றை திறப்பதற்குமுன் வேறு அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக உடைத்து அகற்றப்பட்டிருந்த காரணத்தால் ரூபா 2,584,218 நட்டம் ஏற்பட்டிருந்தது.

**4.5 பதவியணியினர் நிருவாகம்**

தேசிய கைப்பணிகள் மன்றத்தில் 2014 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 262 ஆக இருந்ததுடன், உள்ளபடியான பதவியணியினர் 254 ஆகும். அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 15 வெற்றிடங்களும் ஆரம்ப பயிற்சியற்ற நிலையில் 18 மிகையும் காணப்பட்டது.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 வருடாந்த செயல்நடவடிக்கை திட்டம்**

2014 ஆம் ஆண்டிற்குரிய வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அதில் சில பிரிவுகளின் நோக்கங்களை அடைந்து கொள்வது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

2014 ஆம் ஆண்டிற்குரிய வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த பிரதான நிகழ்ச்சித்திட்டமான பாரம்பரிய கைத்தொழில் கிராம நிகழ்ச்சித்திட்டம் மற்றும் பாரம்பரிய கைத்தொழில் அருங்காட்சியகத்தினை மக்கள் மத்தியில் பிரசித்திப்படுத்துதல் எனும் நோக்கத்தினை அடைந்துகொள்வதற்கு முகாமைத்துவம் தவறியிருந்தது. மேலும், மீளாய்வாண்டினுள் பயிற்சி பெறுவோருக்காக 750 உபகரண தொகுதிகளை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததெனினும் அவற்றுள் 200 மாத்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன், 28 உப நிகழ்ச்சித்திட்டங்களுக்கிடையில் மூன்று உப நிகழ்ச்சித்திட்டங்களின் இலக்குகளை அடைந்து கொள்ளத் தவறியிருந்தது.

**5.2 தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள்**

2009 ஆம் ஆண்டின் போது அமைச்சரவைத் தீர்மானத்தின் படி, இலங்கை பாரம்பரியக் கைத்தொழில் சபையின் கீழ் நாடு முழுவதும் அமைந்துள்ள பயிற்சி நிலையங்கள், அவற்றின் சொத்துக்கள் மற்றும் ஊழியர்கள் தேசிய கைப்பணிகள் மன்றத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் சொத்துக்கள் சட்டரீதியாக கையளிக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை பாரம்பரியக் கைத்தொழில் சபையின் கணக்குகளின் பிரகாரம், நிலையங்களுக்கு உரித்தான ரூபா 46 மில்லியன் தொகையான சொத்துக்கள் அமைச்சரவைத் தீர்மானத்தின் படி தேசிய கைப்பணிகள் மன்றத்தின் சொத்துக்களாக கருதி கணக்கு வைக்கப்பட்டிருந்து. இதனுள் இலங்கை பாரம்பரியக் கைத்தொழில் சபைக்கு கையளிக்கப்பட்ட மூன்று வாகனங்களும் உள்ளடங்கியிருந்தது. நிலையங்களிலுள்ள பதிவேட்டுப் பொருள் மெய்மையாய்விற்காக பாரியளவு பணம் செலவிடப்பட்டிருந்ததெனினும், அந்த நிலையங்களின் உரித்தினை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு
(ஆ) முற்பணக் கட்டுப்பாடு
(இ) கணக்கீடு
(ஈ) கைப்பணிப் பயிற்சி நிலைய நிர்வாகம்.